# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,423—1962 දෙසැම්බර් 7 වැනි සිකුරාදා—1962.12.7

13,423 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நாஞவித அறிவித்தல்கள் .. | 673 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜூமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 673 | " மதுவரிச் சட்ட "அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ. பீ. 87/45.

இலக்கம் ஜே. 39/54

### நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம்

(6 ம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 52 ம் பிரிவினுல் எனக்கு உரிமையாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சர் சாமுவேல் பீற்றர் கிறிஸ்தோபர் பர்ணுந்து ஆகிய யான் 1963 ஜனவரி 1 ம் தேதியிலிருந்து பதுளைப் பிரிவிலுள்ள மொனராகலேனய அப்பிரிவிற்கெனத் தாபிக்கப்பட்ட நீதிவான் நீதிமன்றம் நடைபெறக்கூடி கூடிய இடமாக நியமிக்கிறேன்.

சாம். பீ. வீ. பர்ணுந்து,
நீதியமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஞூ நொவெம்பர் மீ 29 ந் வ.

12—79

### அறிவித்தல்

#### சின்னப்பாடு மீன்பிடித் தகராறு

மேற்கூறிய மீன்பிடித் தகராற்றையிட்டு விசாரணை நடாத்திய திரு. சிறில் வான்லன்ஜன்வேர்க் அவர்கள் அறிக்கை வத்துளுவை சுற்றுப் பிரயாண வங்காளவில் (சேகுயுட் வங்களா) 1962 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ந் திகதி மு. ப. 10 மணிக்கு வாசிக்கப்படுமென்பதை இத்தகராற்றேடு சம்பந்தப்பட்ட கட்சியினர்களுக்கும் இதில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றனது

டி. ஆர். எல். பாலசூரியா,
கடற்றெழில் அதிபர்.

கடற்றெழிற் பகுதி, கொழும்பு 3,
1962 ம் ஞூ நொவம்பர் மீ 29 ந் வ.

12-165.

## அரசாங்கப் பகுதிகளின் நாஞவித அறிவித்தல்கள்

### துப்பாக்கி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல்

#### புத்தள மாவட்டம்

1963 ம் ஆண்டு (டிசம்பர்) மார்கழி மாதம் 1 ந் திகதியிலிருந்து புத்தளம் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட துப்பாக்கிகளை 1963 ம் ஆண்டிற்கு புதுப்பித்தல் இம்மாவட்டத்திலுள்ள பிரிவுக்காரியாதிகாரிகளினுல் செய்யப்படும். ஆகவே புதுப்பித்தல் சம்பந்தமான சகல விண்ணப்பங்களும் அந்தந்தப் பிரிவுக்காரியாதிகாரிகட்கே அனுப்பப்படல் வேண்டும். 1962 ம் ஆண்டு (டிசம்பர்) மார்கழி மாதம் 31 ந் திகதிக்குள் யாவும் புதுப்பிக்கப்படல் வேண்டும். 1963 ம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரம் பெறுவோர் 1962 ம் ஆண்டிற்கான தமது அனுமதிப்பத்திரத்தையும் துப்பாக்கியையும் பரிசோதனைக்காக எனக்காகக் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு 1963 ம் ஆண் ற்கான அனுமதிப்பத்திரம் பெறு முன் காண்பித்தல் வேண்டும். 1962 ம் ஆண்டு (டிசம்பர்) மார்கழி மாதம் 31 ந் திகதிக்குப்பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் என்ஞல் அனுமதிக்கப்பட்டால், அவற்றிற்கு, அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்கு சமமான அபராதமும் விதிக்கப்படும்.

2. பாவிக்க முடியாத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களும் 1963 ம் ஆண்டிற்கான அனுமதிபபத்திரத்தை பெறுபவர்களும், துப்பாக்கிகளை அவற்றின் அனுமதிப்பத்திரத்துடன் பிரிவுக்காரியாதிகாரியிடமோ அல்லது எனது கந்தோரிலோ 1962 ம் ஆண்டு மார்கழி (டிசம்பர்) 31 ந் திகதிக்குள் ஒப்படைத்தல் வேண்டும்.

3. 1963 ம் ஆண்டு (மார்ச்) பங்குனி மாதம் 31 ந் திகதிக்குள் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிகத்தவறினுல் அவர்கள்மீது வழக்குத் தொடரப்படும்.

வீ. இராமனுதன்,
புத்தளம் அரசங்க அதிபர்.

கச்சேரி, புத்தளம்,
1962 ம் ஞூ நொவம்பர் மீ 30 ந் வ.

12—166.

## அனுராதபுரம், வவுனியா கூட்டுறவுப் பிரிவுகள்

1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ம் திகதி வெள்ளிக்கிழமை வெளி வந்த 13,337 ம் இலக்கம் பெற்ற அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை யில், பிரசுரிக்கப்பட்ட அனுராதபுரம் கூட்டுறவுப் பிரிவின் திருத்த அமைப்பைப் பற்றிய அறிவித்தல் இத்தால் ரத்துச் செய்யப்படுகின்றது.

அனுராதபுரம், வவுனியாக் கூட்டுறவுப் பிரிவுகள் இனிமேல் பின்வரு மாறு அமைக்கப்படும்.

**அனுராதபுரம் வடக்குப் பிரிவு**

நுவரகம் பலாத்த கிழக்கு
குறுனு பலாத்த வடக்கு
உடியங்கலாம கோறல

**அனுராதபுரம் தெற்குப் பிரிவு**

நுவரகம் பலாத்த மேற்கு
கலாகம் பலாத்த
குறுனு பலாத்த தெற்கு

**வவுனியாப் பிரிவு**

வவுனியா தெற்கு (தமிழ்)
வவுனியா தெற்கு (சிங்கள)
வவுனியா வடக்கு
கடற்கரைப்பத்துகள்

ரி. ஈ. குணரத்ன,
கூட்டுறவின் ஆக்க ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்.

கூட்டுறவுத்துறை,
தபால் பெட்டி 419,
கொழும்பு,
1962 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ந் உ.

12—104

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடை யிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் **வேண்டும்.**

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும்,** விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. "நகலை" **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக** "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. **நியாயஸ்தலத்தின்** கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ராறல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | ... | ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | ... | ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | ... | ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | ... | ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும்** இலங்கை அரசாங்க வர்த்தமானி **வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் :**

*அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)*

| | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 22 | 50 | ... | 35 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 12 | 50 | ... | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 20 | 0 | ... | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 25 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 50 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | ... | 15 |

இவைகளில் **எவையேனும் பெற விரும்புவோர்** சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி **500,** கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் **விற்பனை** செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.